**F–1766**

| Sub. Code |
|---|
| 7MTA1C1 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**First Semester**

**தமிழ்**

**இக்கால இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. பாரதியார் மகாபாரதக் கதையைப் பெண்ணுரிமைக் காப்பியமாக இயற்றிய நூல் எது?

2. பாரதிதாசனுக்கு வழங்கப்படும் சிறப்புப் பெயர்கள் யாவை?

3. கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை பிறந்த ஊரின் பெயரைக் குறிப்பிடுக.

4. நேயர் விருப்பம் நூலின் ஆசிரியர் யார்?

5. சத்திய வெள்ளம் நாவலில் இடம்பெற்றுள்ள கதாபாத்திரங்கள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக.

6. மீராவின் இயற்பெயரைக் கூறுக.

7. மேலாண்மை பொன்னுசாமி சாகித்ய அகாதெமி விருது பெற்ற நூல் எது?

8. தோல் தொழிலாளர்களின் பிரச்சனையை மையமிட்டு நாவல் படைத்தவர் யார்?

9. வ.சுப. மாணிக்கம் இயற்றிய நூல்கள் நான்கின் பெயரைக் குறிப்பிடுக.

10. பேராசிரியர் ம.திருமலையின் பிற படைப்புக்களைச் சுட்டுக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒருபக்க** அளவில் விடை தருக.

11. (அ) பாஞ்சாலி சபதத்தின் வழி வெளிப்படும் பாரதியின் படைப்பாற்றலை விளக்குக.

(அல்லது)

(ஆ) பொங்கலின் சிறப்புக்களை நாமக்கலாரின் கவிதைகள் வழி விளக்கி எழுதுக.

12. (அ) கவிஞர் மு.மேத்தாவின் கற்பனை வளம் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழுக்கு எதைக் தருவதாகக் கவிஞர் முடியரசுன் குறிப்பிடுகிறார்? விளக்குக.

13. (அ) கு.ப.ராஜகோபாலனின் சிறுகதைகள் புலப்படுத்தும் கருத்துகளைக் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) மின்சாரப் பூ என்னும் சிறுகதை வழி அறியலாகும் கருத்துகளை விளக்குக.

14. (அ) தோல் நாவல் உணர்த்தும் அடித்தட்டு மக்களின் வாழ்க்கை முறைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) குற்றலாக் குறிஞ்சி நாவலின் கதைக் கருவை விளக்குக.

15. (அ) வ.சுப. மாணிக்கனாரின் வாழ்க்கை வரலாற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'காற்றும் கற்பனையும்' என்ற நாடகம் வலியுறுத்தும் உண்மைகளைப் பட்டியலிடுக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்குக் கட்டுரை** வடிவில் விடை தருக.

16. சஞ்சீவி பருவதத்தின் சாரல் வெளிப்படுத்தும் திராவிடக் கருத்துகள் குறித்து விவரிக்க.

17. இன்குலாப் கவிதைகள் புலப்படுத்தும் சமுதாய உணர்வுகளைத் தொகுத்துரைக்க.

18. புதிய வார்ப்புகள் சிறுகதைகளின் பாத்திரப் படைப்புகள் குறித்து விவரிக்க.

19. சத்திய வெள்ளம் நாவலில் வெளிப்படும் வேலையில்லாத் திண்டாட்டம் குறித்து விவரிக்க.

20. இலக்கிய உலா நூல் உணர்த்தும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

———————

**F–1767**

| Sub. Code |
|---|
| 7MTA1C2 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**First Semester**

தமிழ்

பக்தி இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. திருமறைக்காட்டு இறைவன் மீது பாடல்களைப் பாடிய சமயக் குரவர்கள் யார்?

2. சுந்தரர் தன்னை எவ்வாறு அழைத்துக்கொண்டார்?

3. கோத்தும்பி-பொருள் விளக்கம் தருக.

4. அற்புதத் திருவந்தாதியின் ஆசிரியர் யார்?

5. ஒன்பதாம் திருமுறை என்று சுட்டப்பெறும் நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

6. சூடிக்கொடுத்த சுடர்கொடி என்றழைக்கப்படுவர் யார்?

7. நம்மாழ்வார் எவ்வாறு புகழப்படுகின்றார்?

8. இரட்சண்ய சரிதத்தின் ஆசிரியர் யார்?

9. இயேசு பெருமானின் ஐந்து பெயர்களைக் குறிப்பிடுக.

10. குணங்குடியாரின் இயற்பெயரைச் சுட்டுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒருபக்க** அளவில் விடை தருக.

11. (அ) திருமறைக்காடு அமர்ந்த இறைவனைத் திராவிட சிசு எவ்வாறு அடையாளம் காட்டுகிறார் விளக்குக.

(அல்லது)

(ஆ) தம்பிரான் தோழரின் இறைவுணர்வைத் திருவாரூர் பதிகம் கொண்டு விளக்குக.

12. (அ) கோயில் திருப்பதிகம் வழிச் சேந்தனாரின் படைப்பாற்றல் திறனை விளக்குக.

(அல்லது)

(ஆ) காரைக்கால் அம்மையாரின் இறைவுணர்வை அற்புதத் திருவந்தாதி வழி விளக்குக.

13. (அ) திருப்பாவைப் பாடலின் சிறப்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) திருவரங்கத்துப் பெருமானைக் குலசேகர ஆழ்வார் எவ்வாறு வாழ்த்திப் போற்றுகின்றார்? விளக்குக.

14. (அ) இரட்சண்ய சரிதத்தின் அமைப்பினையும் சிறப்பினையும் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) இரட்சணிய சரிதம் தோன்றியதன் பின்புலத்தை விளக்குக.

15. (அ) குணங்குடி மஸ்தானின் வாழ்க்கை வரலாற்றை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆனந்தக் களிப்புப் பாடல்களின் சிறப்புகளை விவரிக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. திருநாவுக்கரசரின் பக்தி நெறியினைத் திருக்குறுந்தொகை வழி விவரிக்க.

17. கோவில் திருப்பதிகத்தின் வழிச் சேந்தனார் கூறும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

18. பாவை நோன்பு மேற்கொள்ளும் முறைகள் குறித்து ஆண்டாள் கூறும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

19. யூதாசுவின் தீய குணங்களை இரட்சண்ய சரிதம் வழிப் புலப்படுத்துக.

20. குணங்குடி மஸ்தான் சாகிபு காஉணர்த்தும் வாழ்வியல் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

———————

**F–1768**

| Sub. Code |
|---|
| 7MTA1C3 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019.**

**First Semester**

**தமிழ்**

**அற இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு** வரிகளில் விடை தருக.

1. திருக்குறள் எந்தெந்த மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது?

2. பழமொழி நானூறு பெயர்க் காரணம் தருக.

3. நாலடியார் குறித்து வழங்கப்படும் கர்ணபரம்பரை கதை யாது?

4. இன்னா நாற்பதினை இயற்றியவர் யார்?

5. குமரகுருபரர் சிறு குறிப்பு வரைக.

6. சிவப்பிரகாசர் இயற்றிய நூல்கள் யாவை?

7. சீவலமாறன் என்று அழைக்கப்படுபவர் யார்?

8. உலகநாதர் இயற்றிய நூல் எது?

9. 'நைடதம் புவர்க்கு ஔடதம்' என்ற தொடர் யாரைச் சிறப்பிக்கின்றது?

10. ஔவையார் ஆத்திச்சூடி அமைந்துள்ள முறையைக் குறிப்பிடுக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) கல்வி குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) பெரியாரைத் துணைக் கோடலால் விளையும் நன்மைகள் குறித்து விளக்குக.

12. (அ) அறன் வலியுறுத்தல் குறித்து நாலடியார் கூறும் கருத்துக்கள் யாவை?

(அல்லது)

(ஆ) 'கல்லாமல் பாகம் படும்', 'கன்று அடியுள் ஆழ்ந்துவிடல்', 'எழுதினான் ஓலை பழுது' என்னும் பழமொழிகள் உணர்த்தும் கருத்துக்களைப் பழமொழி நானூற்றின் வழி விளக்குக.

13. (அ) கல்வியின் சிறப்புக் குறித்துக் குமரகுருபரர் கூறும் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) நன்னெறி உணர்த்தும் வாழ்வியல் கருத்துக்களை விவரிக்க.

14. (அ) அழகு தரக்கூடிய செயல்களாக அதிவீரராம பாண்டியர் கூறும் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்னும் கூற்றை மூதுரை வழி விளக்குக.

15. (அ) வாழ்க்கையில் கைக்கொள்ளக்கூடிய செயல்களாக ஔவையார் கூறும் கருத்துக்களை ஆத்திசூடி வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) பாரதி படைத்த புதிய ஆத்திசூடியின் அமைப்பினையும், சிறப்பினையும் விளக்கி எழுதுக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக் கட்டுரை வடிவில்** விடை தருக.

16. வலி அறிதல் அதிகாரத்தின் வழி வள்ளுவர் கூறும் கருத்துக்களை விரித்துரைக்க.

17. மூன்றுரையனார் குறிப்பிடும் வாழ்வியல் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

18. நன்னெறி புலப்படுத்தும் நீதிகளைத் தொகுத்துரைக்க.

19. கொன்றை வேந்தன் புலப்படுத்தும் வாழ்வியல் அறங்களை விவரிக்க.

20. பாரதிதாசனின் ஆத்திசூடி வழி அறியலாகும் அறக்கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

| F–1769 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA1C4 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**First Semester**

தமிழ்

தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - (இளம்பூரணர் உரை)

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. இடையின எழுத்துக்களைக் கூறுக.

2. “இகர, யகரம் இறுதி விரவும்” - பொருள் தருக.

3. தாம் இனிது பிறக்கும் எழுத்துக்கள் யாவை?

4. எழுத்துச்சாரியை என்றால் என்ன?

5. “பனை என் அளவும் கா என் நிறையும்” என்ன சாரியை பெறும்?

6. மகர மெய்யெழுத்துப் பெறும் சாரியை எது?

7. “நீட வருதல் செய்யுளுள் உரித்தே” - பொருள் தருக.

8. “எகின் மரம் ஆயின் ஆண்மர இயற்றே” - பொருள் தருக.

9. “எட்டன் ஒற்றே ‘ண’ கரம் ஆகும்” - விளக்குக.

10. ஒலியனியல் என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க அளவில்** விடை தருக.

11. (அ) உயிர்மெய் எழுத்துக்கள் குறித்து தொல்காப்பியர் உணர்த்தும் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) எழுத்துக்களின் இயக்கம் குறித்து விளக்குக.

12. (அ) "அன்ன என்ப சாரியை மொழியே" விளக்குக.

(அல்லது)

(ஆ) மெய்யெழுத்துக்களின் பிறப்பு முறைகள் குறித்து விளக்குக.

13. (அ) உயர்திணைப் பெயர்ப் புணர்ச்சி குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) மெய் ஈறுகள் குறித்து விளக்கி எழுதுக.

14. (அ) அகர ஈற்றுச் சுட்டுப்பெயர்ப் புணர்ச்சி குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) புள்ளி மயங்கியலில் கூறப்பட்டுள்ள 'ண'கர ஈற்றுப்புணர்ச்சி விதிகளைக் கூறி விளக்குக.

15. (அ) எண்ணுப்பெயர்கள் புணரும் போது பெறும் மாற்றங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஒலியன்களை வகை செய்யும் முறைகள் குறித்து விளக்குக.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. மொழி இறுதி வரும் எழுத்துக்கள் குறித்து விவரிக்க.

17. எழுத்துக்களின் பிறப்பு முறைகள் குறித்துக் கட்டுரை வரைக.

18. உயிர் ஈறுகள் குறித்து உருபியல் புலப்படுத்தும் கருத்துக்களை விவரிக்க.

19. இடையின ஈறுகள் புணரும் தன்மையைப் புள்ளி மயங்கியல் வழி ஆராய்க.

20. குற்றியலுகரப் பொதுப்புணர்ச்சி, சிறப்பு புணர்ச்சி குறித்துக் குற்றியலுகரப் புணரியல் தரும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

---

| F–1770 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA1E2 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**First Semester**

தமிழ்

விருப்பப்பாடம் : மக்கள் தகவல் தொடர்பியல்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. மரபு வழிச் சாதனங்கள் என்றால் என்ன?

2. தொடர்பியல் என்றால் என்ன?

3. திங்கள் இதழ்கள் நான்கின் பெயரினைச் சுட்டுக.

4. 'செய்திகள் மேஜை' என்றால் என்ன?

5. இந்தியாவில் வானொலி எப்போது எங்கு தொடங்கப்பட்டது?

6. வர்கீஸ்குழு பரிந்துரைகள் இரண்டினைக் கூறுக.

7. இந்தியாவில் திரைப்படம் தோன்றிய ஆண்டு எது?

8. 'கலைப்படங்கள்' என்றால் என்ன?

9. 'பேஜர்' என்றால் என்ன?

10. 'சி.டி.ரோம்' என்றால் என்ன?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) பத்திரிக்கைச் சுதந்திரத்தின் தேவை குறித்து ஆராய்ந்துரைக்க.

(அல்லது)

(ஆ) பத்திரிக்கைத் தணிக்கை முறைகள் குறித்து விளக்கி எழுதுக.

12. (அ) தமிழ் இதழ்களின் வளர்ச்சி குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) இதழ்கள் தொடங்கு முன் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விளக்குக.

13. (அ) தொலைக்காட்சியின் அமைப்பு முறை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) இந்தியாவில் வானொலி தோன்றிய வரலாறு குறித்து விளக்குக.

14. (அ) திரைப்படச் சங்கங்கள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) திரைப்படத் தணிக்கை குறித்து விளக்கி எழுதுக.

15. (அ) தகவல் தொடர்பியலுக்குப் பயன்படும் கருவிகள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) தகவல் தொடர்பியலில் செயற்கைக் கோளின் பங்களிப்பினை விளக்கி எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **<u>மூன்றனுக்குக்</u>** <u>கட்டுரை</u> வடிவில் விடை தருக.

16. தொடர்புச் சாதனங்களின் பாகுபாடுகள் குறித்து விவரிக்க.

17. இதழ்களின் நிர்வாக அமைப்பு முறை குறித்து விவரிக்க.

18. வானொலியின் பல்வேறு வகையான ஒலிபரப்புகள் குறித்துக் கட்டுரை வரைக.

19. இந்தியாவில் திரைப்படத்தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விவரிக்க.

20. "தொடர்பியல் சாதனங்களும் மக்கள் கருத்துக்களும்" என்பது குறித்துக் கட்டுரை வரைக.

———————

**F–1771**

**Sub. Code**
**7MTA1E3**

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**First Semester**

தமிழ்

விருப்பப்பாடம் : கோயிற்கலை

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. 'கோயில்' என்றால் என்ன?

2. 'தலம்' என்றால் என்ன?

3. ஆறுகாலப் பூசைகளின் பெயரினைச் சுட்டுக.

4. 'திருக்கல்யாணம்' என்றால் என்ன?

5. 'குடவோலை' முறை என்றால் என்ன?

6. 'நிறுவாகம்' என்றால் என்ன?

7. நாட்டுப்புறப் பெண் தெய்வங்களின் பெயர்கள் நான்கினைக் கூறுக.

8. 'குறியீடுகள்' என்றால் என்ன?

9. 'நம்பிக்கைகள்' என்றால் என்ன?

10. இசுலாமிய சமயத்தவரின் படையல்பொருட்கள் மூன்றினைக் கூறுக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) கோவில் குறித்து ஆகமங்கள் கூறும் இலக்கணங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) கோவிலின் தோற்றம் வளர்ச்சி குறித்து எழுதுக.

12. (அ) நாள் வழிபாட்டின் சிறப்புகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ‘பிரமோற்சவம்’ என்றால் என்ன? விளக்கி எழுதுக.

13. (அ) சோழர்காலக் கோவில்களின் அமைப்பு முறை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கோவில்களின் வளர்ச்சிக்கு மடங்களின் பங்களிப்பு குறித்து விளக்குக.

14. (அ) திருமால் திருவுருவங்களின் சிறப்புக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கிறித்துவ சமய திருவுருவநிலை குறித்து விளக்கி எழுதுக.

15. (அ) பெருந்தெய்வ வழிபாட்டில் ஏற்படும் நம்பிக்கைகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) கிறுத்துவ சமயப் படையல் முறைகளில் ஏற்படும் நம்பிக்கைகள் குறித்து விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடை தருக.

16. கோவில்களின் இன்றைய நிலை குறித்துக் கட்டுரை வரைக.

17. திருக்கோவில்களில் நடைபெறும் வழிபாட்டு முறைகள் குறித்து விவரிக்க.

18. திருக்கோவில் நிறுவாக அமைப்பு முறைகள் குறித்துக் கட்டுரை வரைக.

19. நாட்டுப்புறத் தெய்வங்களின் சிறப்புக்கள் குறித்து விவரிக்க.

20. இசுலாமிய வழிபாட்டு முறைகள் குறித்துக் கட்டுரை வரைக.

| F–1772 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA2C1 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**Second Semester**

**தமிழ்**

காப்பிய இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. மாடலமறையோன் பற்றிக் குறிப்பிடுக.
2. அமுதசுரபியின் இயல்பினைஙச சுட்டுக.
3. சீவசிந்தாமணி – குறிப்பு வரைக.
4. பெருங்கதை – பெயர்க்காரணம் தருக.
5. தடுத்தாட் கொள்ளப்பட்ட அடியாரைக் குறிப்பிடுக.
6. கம்பராமாயணத்தில் சுந்தரகாண்டத்தின் இடத்தினைக் சுட்டுக.
7. பொற்கிழி கொடுக்கப்பட்ட காரணத்தைப் பகர்க.
8. வில்லிபாரதத்தின் ஆசிரியர் பெயரினை எழுதுக.
9. ‘இரட்சண்யிம்’ – சொற்பொருள் விளக்கம் தருக.
10. சீறாப்புராணத்தின் காண்டங்களைச் சுட்டுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) அறவணர்த் தொழுத காதையின் கருப்பொருளை விளக்குக.

(அல்லது)

(ஆ) கண்ணகியின் துயரினை எழுத்துரைக்க.

12. (அ) சீவகனின் சிறப்பினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) உயிரன்பு குறித்து பெருங்கதை கூறுவனவற்றைத் தருக.

13. (அ) இராமனின் தோற்றப் பொழிவினைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) சிவபெருமானின் அருட்குணத்தை எடுத்துரைக்க.

14. (அ) திருவிளையாடல் புராணத்தின் தேவை குறித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) குதாட்ட சருக்கத்தின் செய்திகளைத் தருக.

15. (அ) இறைவனின் பெருமைகளை வரலாற்றுப்படலம் வழி புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) நபிகள் நாயகத்தின் முன்னோர்கள் பற்றி விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. கண்ணகி வழக்குரைத்த விதத்தினை விவரிக்க.

17. சுரமஞ்சரியார் இலம்பகம் உணர்த்தும் சமணம் பற்றிய செய்திகளைத் தொகுத்துரைக்க.

18. ராம அவதாரத்தின் நோக்கத்தினைக் கட்டுரைக்க.

19. தருமனின் வீழ்ச்சிக்கான காரணத்தை விளக்குக.

20. தலைமுறை படலம் உணர்த்தும் செய்திகளை விவரிக்க.

———————

**F–1773**

| Sub. Code |
|---|
| 7MTA2C2 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**Second Semester**

தமிழ்

சிற்றிலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. கலம்பகம் சொற்பொருள் விளக்கம் தருக.

2. பிள்ளைத் தமிழ் உறுப்புக்களைக் கூறுக.

3. தூதுக்குரியனவாக இலக்கண நூல்கள் எவற்றைக் குறிக்கின்றன?

4. தமிழ்விடு தூது ஆசிரியர் பற்றி அறிவயன யாவை?

5. பரணி இலக்கியம் யாருக்காகப் பாடப் பெறுவது?

6. மூவர் உலாவின் சிறப்பினை எழுதுக.

7. பள்ளு இலக்கியப் பாடுபொருளை விளக்குக.

8. அபிராமி அந்தாதி எத்தலத்து இறைவியைப் பாடுபொருளாகக் கொண்டது?

9. குறி சொல்வதற்காகக் குறத்தி வேண்டியவை யாவை?

10. திருத்தாண்டக வேந்தர் என்று நான்மணிமாலை யாரைக் குறிக்கின்றது? விளக்குக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) நந்திக் கலம்பகத்தில் இடம்பெற்றுள்ள அகப்பொருட் கூறுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) செங்கீரைப் பருவப் பாடலொன்றின் கவிநயத்தைப் புலப்படுத்துக.

12. (அ) 'தமிழ்' தூது போவதற்குரிய தகுதிகளாகத் தலைவி குறிப்பனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) தூது செல்லும் போது தமிழ் யாரையெல்லாம் சந்திக்கக் கூடாது என்று தலைவி கூறுகிறாா்? விளக்குக.

13. (அ) கலிங்கத்துப் பரணியின் வருணனைச் சிறப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சோழர் குல முன்னோர் புகழை உலாவழி விளக்குக.

14. (அ) சிவபெருமான் தொடர்பான தொன்மங்களை மூத்த பள்ளி ஏசலில் எவ்வாறு பயன்கொண்டுள்ளார் என்பதை விளக்குக.

(அல்லது)

(ஆ) அபிராமிவல்லியின் தோற்றப் பொலிவினை விளக்குக.

15. (அ) குறத்தி கூறிய நல்ல குறிகள் எவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) சுந்தரருக்கு இறைவன் அருளிய திறத்தினை நான்மணி மாலை வழி விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. முத்துகுமரனின் சிறப்பினைப் பிள்ளைத் தமிழ் வழி விவரிக்க.

17. தமிழ்விடுதூது ஆசிரியரின் தமிழ்ப் பற்றினை மதிப்புடுக.

18. கலிங்கத்துப் பரணி வழி வெளிப்படும் செயல் கொண்டாரின் கற்பனைத் திறத்தினை விவரிக்க.

19. அபிராமி அந்தாதி விவரிக்கும் அபிராமி வல்லியின் அருட்பண்புகளை விரித்துரைக்க.

20. திரிகூடராசப்பக் கவிராயரின் புலமைச் சிறப்பினைக் குற்றாலக் குறவஞ்சி வழி விவரிக்க.

———————

**F–1774**

| **Sub. Code** |
|---|
| **7MTA2C3** |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**Second Semester**

**தமிழ்**

இலக்கியக் கொள்கைகளும் திறனாய்வும்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. திறனாய்வாளர் என்பவர் யார்?

2. திறனாய்வின் பணிகள் குறித்து ரிச்சர்ட்ஸ் கூறும் கருத்துக்கள் யாவை?

3. மரபுவழித் திறனாய்வு என்றால் என்ன?

4. முருகியல் திறனாய்வு என்றால் என்ன?

5. ஒத்துணர்வு என்றால் என்ன?

6. உணர்ச்சி என்றால் என்ன?

7. நடை என்றால் என்ன?

8. ஷேக்ஸ்பியரின் நாடகங்களுள் ஏதேனும் இரண்டினைக் கூறுக.

9. திறனாய்வுக் கொள்கைகளைக் கூறுக.

10. புறநிலைக் கொள்கை என்றால் என்ன.

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) திறனாய்வு பற்றிப் பல்வேறு அறிஞர்கள் கூறியுள்ள கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) திறனாய்வின் நோக்கங்களை விளக்கி எழுதுக.

12. (அ) விதிமுறைத் திறனாய்வு குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) வாழ்க்கை வரலாற்று முறைத் திறனாய்வு குறித்து விளக்கி எழுதுக.

13. (அ) இயைபுக் கற்பனை குறித்து விளக்கிக் கூறுக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியர் சுட்டு மெய்ப்பாடுகளை விளக்கிக் கூறுக.

14. (அ) புதுக்கவிதையின் வடிவம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) நவீனத் தமிழ் நாடகங்களின் தற்காலப் போக்குகள் குறித்து விளக்குக.

15. (அ) திறனாய்வுக் கொள்கைகளில் ஊவியல் பெறுமிடத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) அமைப்பியல் கொள்கை குறித்து விளக்கி எழுதுக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. திறனாய்வாளனின் பல்வேறு தகுதிகளை விளக்கிக் கட்டுரை வரைக.

17. ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு குறித்து விவரிக்க.

18. படைப்புக் கற்பனையின் பல்வேறு கூறுகளைச் சான்றுகளுடன் விவரிக்க.

19. தற்கால தமிழ் நாவல்களில் ஊடாடியுள்ள திறனாய்வு முறைகளை விவரிக்க.

20. திறனாய்வுக் கொள்கையின் வகைகளை விவரிக்க.

———————

**F–1775**

**Sub. Code**
**7MTA2C4**

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**Second Semester**

தமிழ்

தொல்காப்பியம் - சொல்லதிகாரம் (சேனாவரையர் உரை)

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. செப்பு வினா என்றால் என்ன?
2. பால்காட்டும் ஈறுகள் இரண்டினைக் கூறுக.
3. வேற்றுமை என்றால் என்ன?
4. உயர்திணையில் விளியேற்கும் புள்ளியீறுகளைக் கூறுக.
5. விரவுப்பெயர் என்றால் என்ன?
6. வினை என்றால் என்ன?
7. மன்றவென் கிளவி தேற்றம் செய்யும் - பொருள் தருக.
8. உரிச்சொல் என்றால் என்ன?
9. திசைச் சொல் என்றால் என்ன?
10. உருபன் என்றால் என்ன?

பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) இயற்கைப் பொருளும் செயற்கைப் பொருளும் எவ்வாறு கிளக்கப்பட வேண்டும்? விளக்குக.

(அல்லது)

(ஆ) தொடர் இலக்கணம் குறித்த செய்திகளைக் கிளவியாக்கத்தின் வழி நின்று விளக்குக.

12. (அ) எழுவாய் ஏற்கும் பயனிலைகள் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆகுபெயரை விளக்கி அதன் பாகுபாட்டை விளக்கி எழுதுக.

13. (அ) விளியேலாப் பெயர்கள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) பெயரியல் உணர்த்தும் சொல்லின் பொது இலக்கணம் குறித்து விளக்குக.

14. (அ) இடைச்சொற்களின் பயன்பாடுகள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) உரிச்சொல்லின் பொது இலக்கணம் கூறி பலசொல் ஒரு பொருட்குரியனவற்றை விளக்குக.

15. (அ) செய்யுள் ஈட்டச் சொற்கள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) உருபன்களைப் பற்றி சிறுகுறிப்பு வரைந்து, தமிழ் வினைச் சொல்லில் அனையும் உருபன்களைப் பிரித்து உணர்த்துக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடை தருக.

16. வழுக்காத்தலை வற்புறுத்தும் பகுதியே கிளவியாக்கம் என்பதை நிறுவுக.

17. ஐந்தாம் வேற்றுமை உணர்த்தும் பொருட்பாகுபாடுகள் குறித்து விவரிக்க.

18. விரவுப் பெயர்களின் தொகை வகைகளை விவரிக்க.

19. உரியியல் பிற்காலத்து எழுந்த நிகண்டு நூல்களுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றது என்பார் கூற்றுக்குச் சான்று தந்து நிறுவுக.

20. பொருள்கோள் பற்றித் தொல்காப்பியர் கூறும் கருத்துக்களை விவரிக்க.

———————

**F–1776**

**Sub. Code**
**7MTA2E1**

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**Second Semester**

தமிழ்

விருப்பப்பாடம் - கம்பர்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. காவிய மரபு பற்றி எழுதுக.

2. தமிழ்க் காப்பியங்கள் நான்கினைச் சுட்டுக.

3. வான்மீகி - குறிப்பு வரைக.

4. கம்பர் குறித்து வழங்கும் கதை ஒன்றினை எழுதுக.

5. கம்பர் வான்மீகியிடம் வேறுபடும் இடங்கள் இரண்டினைத் தருக.

6. அயோத்தியா காண்டம் - விளக்கம் செய்க.

7. கம்பரின் காப்பியத்திறன் பற்றிக் குறிப்பிடுக.

8. இராமனின் ஆளுமைத்திறனை எடுத்துரைக்க.

9. காளிதாசர் பற்றி எழுதுக.

10. எழுத்தச்சனின் இராமகதை பற்றிச் சுட்டுக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) வீரயுகக் காப்பியங்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழ்க்காப்பியங்களின் சிறப்பினைச் சுட்டுக.

12. (அ) இந்தியில் அமைத்துள்ள இராமகதை பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) கம்பர் குறித்து அறியப்படும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

13. (அ) கம்பராமாயணத்தின் படல அமைப்பு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ்க் காப்பியங்களில் கம்பராமயணத்தின் இடத்தைத் திறனாய்க.

14. (அ) கம்பரின் காப்பிய பார்வையினை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) இராமனின் பண்பு நலன் பற்றி எடுத்துரைக்க.

15. (அ) கம்பன் ஆண்ட தமிழகம் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) வெர்ஜில் பற்றி விரித்துரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழில் காப்பியங்கள் தோன்றுவதற்கான காலச்சூழலை விளக்குக.

17. வான்மீகி வழிதான் கம்பராமாயணம் என்பார் கூற்றை ஆய்க.

18. காப்பிய இலக்கணம் கம்பராமாயணத்திற்குப் பொருந்துமாற்றை ஆராய்க.

19. கம்பனின் காப்பியக் கட்டமைப்பின் அழகியலைப் புலப்படுத்துக.

20. கம்பராமாயணம் ஏனைய ராமாயணங்களில் இருந்து வேறுபட்டு நிற்கும் இடங்களைத் தொகுத்துரைக்க.

———————

**F–1777**

| Sub. Code |
|---|
| 7MTA2E3 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**Second Semester**

தமிழ்

விருப்பப்பாடம் — சித்தர் இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. 'சித்தர்' என்பதன் பொருள் யாது?

2. சித்தர் வாழும் இடங்களின் பெயர்கள் நான்கினைக் கூறுக.

3. திருமந்திரம் என்றால் என்ன?

4. சிவபதம் சேர சிவவாக்கியர் கூறும் வழிகள் இரண்டினைக் கூறுக.

5. "காலனைவென்ற கருத்தறிவாளர்க்குக் கோலங்களே துக்கடி" என்று பாடியவர் யார்?

6. 'அழுகணி சித்தர்' – பெயர் காரணம் தருக.

7. செங்காட்டில் ஆடுகின்றவர் யார்?

8. 'அற்புதமாய் இந்த உடல்ஆவி அடங்குமுன்னே' யாரைப் போற்றித் தவம் பெற்று வாழவேண்டும்?

9. முன்னை வினைகெடவே பத்திரிகிரியார் சுட்டும் மூன்று வகைக் காட்சிகளைக் கூறுக.

10. குறியாகக் கொண்டு குலம் அளித்த நாயகன் யார்?

பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) சித்தர்களின் எண்ணிக்கை குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சித்தர்களின் இலக்கியப் பண்பாடுகள் குறித்து விளக்குக.

12. (அ) "கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே" – விளக்குக.

(அல்லது)

(ஆ) சிவவாக்கியர் சுட்டும் கடவுள் யார்? விளக்குக.

13. (அ) குதம்பைச் சித்தர் பாடல் புலப்படுத்தும் நீதிக் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) அழுகணிச் சித்தரின் வாழ்வியலை விளக்கி எழுதுக.

14. (அ) பட்டினத்தார் பாடல்களில் காணலாகும் புலம்பல் செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பட்டினத்தார் கூறும் வாழ்வியல் தத்துவங்களை விளக்குக.

15. (அ) பத்திரிகிரியார் பாடல்கள் நம்மை எங்ஙனம் நெறிப்பத்துகிறது? தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) பத்திரிகிரியார் பாடல்களில் பொதிந்துள்ள உண்மைத் தன்மைகள் யாவை? விளக்குக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. சித்தர் தம் சமய நோக்குக் குறித்துக் கட்டுரை வரைக.

17. திருமூலர் கூறும் வாழ்வியல் நிலையாமைக் கருத்துக்களை விவரிக்க.

18. குதம்மைச் சித்தர் பாடல் புலப்படுத்தும் பொருண்மைகளை ஆராய்ந்துரைக்க.

19. பட்டினத்தார் பாடல்வழி அறியலாகும் வாழ்வியல் செய்திகளை விவரிக்க.

20. பத்திரகிரியார் பாடல்களில் காணலாகும் சமுதாயச் சிந்தனைகளை விவரிக்க.

———————

**F–1778**

**Sub. Code**
**7MTA3C1**

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**Third Semester**

**தமிழ்**

**சங்க இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. எட்டுத் தொகையில் உள்ள அகநூல்களைக் குறிப்பிடுக.

2. சேரர்கள் குறித்துப் பாடப்பட்ட நூல் எது?

3. அகநானூற்றிற்கு வழங்கப்படும் வேறு பெயர் எது?

4. வஞ்சி நெடும்பாட்டு என்றழைக்கப்படுவது எது?

5. குறுந்தொகை பொருள் விளக்கம் தருக.

6. பரிபாடலில் இடம் பெற்றுள்ள பாடல்கள் எத்தனை?

7. கலித்தொகையினைத் தொகுத்தவர் யார்?

8. சிறுபாணாற்றுப்படை பெயர்க்காரணம் தருக.

9. பட்டினப்பாலையில் இடம்பெற்றுள்ள வாணிப முறைகள் யாவை?

10. குறிஞ்சிப்பாட்டு புலப்படுத்தும் ஏழு மலர்களின் பெயர்களைச் சுட்டுக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) பரணர் பாடிய புறநானூற்றுப் பாடலின் சிறப்புகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) பதிற்றுப்பத்துப் பாடல்கள் அனைத்தும் பாடாண் திணையில் அமைந்திருக்கக் காரணம் என்ன?

12. (அ) பிரிவிடை ஆற்றாளாய் தலைமகள் தோழிக்குச் சொல்லியதை மாமூலனார் பாடல் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) தலைவி மாலை பொழுது கண்டு புலம்பியபோது, தோழி ஆற்றியதைக் கலித்தொகை பாடல் கொண்டு விளக்குக.

13. (அ) ஆலங்குடி வங்கனாரின் பாடல் புலப்படுத்தும் இறைச்சி கோட்பாட்டினை விளக்குக.

(அல்லது)

(ஆ) பரிபாடல்கள் காட்டும் திருமாலின் சிறப்புகளை விளக்கி எழுதுக.

14. (அ) குறிஞ்சிப்பாட்டு புலப்படுத்தும் தமிழரின் அகப்பொருள் மரபுகளைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) நல்ல நேரம் பார்க்கும் முறை குறித்து முல்லைப்பாட்டு புலப்படுத்துச் செய்திகளை விளக்குக.

15. (அ) காவேரிப்பூம்பட்டினத்தின் சிறப்புகளைப் பட்டினப்பாலை கொண்டு விளக்குக.

(அல்லது)

(ஆ) சிறுபாணாற்றுப்படையில் இடம்பெற்றுள்ள செய்திகளை விளக்கி எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக் கட்டுரை வடிவில்** விடை தருக.

16. மன்னர்களுக்குச் செவியறிவுறுத்தும் வகையில் அமைந்த புறநானூற்றுப் பாடல்களின் கருத்துகளை விவரிக்க.

17. களிற்றுயானை நிரை பகுப்பில் உள்ள பாடல்களின் சிறப்புகளை விவரிக்க.

18. ஐங்குறுநூற்றுப் பாடல்கள் புலப்படுத்தும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

19. குறிஞ்சிப்பாட்டின் சிறப்புக்கள் குறித்துக் கட்டுரை வரைக.

20. பாணர்களின் வறுமை நிலைகளைச் சிறுபாணாற்றுப்படை கொண்டு நிறுவுக.

**F–1779**

| Sub. Code |
|---|
| 7MTA3C2 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**Third Semester**

தமிழ்

தொல்காப்பியம் – பொருளதிகாரம் (நச்சினார்க்கினியர் உரை)
(முதல் ஐந்து இயல்கள்)

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. மருதத்திணைக்குரிய சிறுபொழுதுகள் யாவை?

2. முந்நீர் வழக்கம் யாருக்கு இல்லை?

3. உழிஞை என்னும் புறத்திணை எத்திணைக்குப் புறனாகும்?

4. 'கொற்ற வள்ளை' என்பதன் பொருள் யாது?

5. இரவுக்குறி என்றால் என்ன?

6. அம்பலுக்கும் அலருக்கும் உள்ள வேறுபாடு யாது?

7. "அலரின் தோன்றும் கமத்தின் சிறப்பே" – பொருள் தருக.

8. "வேண்டிய கல்வி யாண்டு மூன்று இறவாது" – பொருள் தருக.

9. இறைச்சி என்றால் என்ன?

10. காட்டலாகாப் பொருள் என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பிரிவின் கண் தோழிக்குக் கூற்று நிகழும் இடங்கள் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) "புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே" – விளக்குக.

12. (அ) வெட்சித்திணையின் இலக்கணத்தையும் துறைகளையும் பற்றித் தொல்காப்பியர் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) காஞ்சித்திணையின் துறைகளை விளக்கி எழுதுக.

13. (அ) மறையோர் தேஎத்து மன்றல் எட்டினை விளக்கிக் கூறுக.

(அல்லது)

(ஆ) களவொழுக்கத்தின் கண் செவிலிக்குரிய பங்கினை விளக்கி எழுதுக.

14. (அ) தொல்காப்பியர் கூறும் கற்பின் இலக்கணத்தை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) வாயில்கள் என்பவர் யார்? அவர் கூற்று நிகழுமிடங்களை விளக்குக.

15. (அ) ஒருசார் காமப் பொருண்மை பற்றி நிகழும் கிளவிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) உள்ளுறை குறித்த பொருளியற் கருத்துக்களை விளக்கி எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. பிரிவின் கண் தலைவிக்குக் கூற்று நிகழும் இடங்களைத் தொகுத்துரைக்க.

17. தொல்காப்பியர் கூறும் தும்பைத் திணைச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

18. களவுக்காலத்தில் நிகழும் தலைவன் கூற்றுக்களை விவரிக்க.

19. தலைவியின் இல்லறவாழ்வு சிறக்கத் தோழி ஆற்றும் கடமைகளைக் கற்பியலினின்று விவரிக்க.

20. தலைவியின் இயல்புகளாகப் பொருளியல் கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

———————

**F–1780**

| Sub. Code |
| --- |
| 7MTA3C3 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**Third Semester**

**தமிழ்**

**ஆராய்ச்சி நெறிமுறைகள்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. ஆய்வு என்றால் என்ன?

2. கோட்பாட்டு ஆய்வின் தன்மைகள் யாவை?

3. வினாநிரல்–குறிப்புத் தருக.

4. கள ஆய்வினால் ஏற்படும் சிக்கல்கள் ஐந்தினைக் கூறுக.

5. துணை நூற்பட்டியல்–பொருள் தருக.

6. நூல் அடங்கல் என்றால் என்ன?

7. சைவ சமய உரையாசிரியர்கள் நால்வரின் பெயரினைச் சுட்டுக.

8. ஜி.யு போப்பின் தமிழாய்வுப் பணிக்கு மூன்று சான்றுகள் தருக.

9. உ.வே.சா. பதிப்பித்த நூல்கள் நான்கினைக் கூறுக.

10. மு.வ. வின் தமிழாய்வுப் பணிகள் மூன்றினைக் கூறுக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) தமிழில் அறிவியல் ஆய்வின் தேவையை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) விளக்க முறை ஆய்வின் தன்மைகளை விளக்கி எழுதுக.

12. (அ) ஆய்விற்கு நூலகப் பயன்பாட்டின் தேவையை ஆராய்க.

(அல்லது)

(ஆ) தகவல் திரட்டுதலில் விளையும் சிக்கல்களைப் பட்டியலிடுக.

13. (அ) ஆய்வேட்டின் வடிவமைப்புக் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆய்வேட்டில் அடிக்குறிப்பின் தேவை யாது? விளக்கி எழுதுக.

14. (அ) தமிழாய்வின் தோற்றத்தை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) தற்கால ஆய்வின் போக்குகள் குறித்து விளக்குக.

15. (அ) மு. ராகவையங்காரின் தமிழாய்வுப் பணிகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) கா. சிவத்தம்பியின் ஆய்வு நெறிகளை விளக்கி எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சங்க இலக்கிய ஆய்வுகள் குறித்து விளக்கியுரைக்க.

17. ஆய்வில் கருதுகோளின் இன்றியமையாமை குறித்து விவரிக்க.

18. ஆய்வுத் திட்டமிடுதலின் நோக்கமும் பயனும் குறித்துக் கட்டுரை வரைக.

19. இலக்கண ஆய்விற்குக் கால்டுவெல் அவர்களின் பங்களிப்பினைக் கட்டுரையாக்குக.

20. தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் ஆய்வுத் திடம் குறித்து விவரிக்க.

**F–1781**

**Sub. Code**
**7MTA3E1**

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**Third Semester**

தமிழ்

விருப்பப்பாடம் — ஊடகத் தமிழ்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. ‘தூது’ என்றால் என்ன?

2. ‘தகவல் தொடர்பு’ என்றால் என்ன?

3. ‘பேஜர்’ என்றால் என்ன?

4. ‘இணையம்’ என்றால் என்ன?

5. ஒலி, ஒளிக் காட்சி மூலம் செய்தி பரப்பும் சாதனம் எது?

6. “வானொலி” – சொற்பொருள் விளக்கம் தருக.

7. அரசு நடத்தும் தொலைக்காட்சியின் பெயரினைச் சுட்டுக.

8. கம்பிவழித் தொலைக்காட்சி என்றால் என்ன?

9. ‘கணினி’ விளக்கம் தருக.

10. தமிழ் இணையதளத்தின் பெயர்கள் நான்கினைக் கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) 'சைகை' முறைத் தகவல் தொடர்பு என்றால் என்ன? விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) மரபுவழித் தகவல் தொடர்புச் சாதனங்களுள் 'பறை' யின் பங்களிப்புக் குறித்து விளக்குக.

12. (அ) செல்லுலார் தொலைபேசிக் கருவிகள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) தகவல் தொடர்பில் தந்தி பெறும் இடத்தை மதிப்பீடு செய்க.

13. (அ) இந்தியாவில் தொலைபேசியின் தொடக்க கால நிலை குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) தேசிய வானொலி நிலையங்கள் குறித்து விளக்கி எழுதுக.

14. (அ) தொலைக்காட்சியின் வரலாறு குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) தனியார் தொலைக்காட்சி நிலையங்கள் குறித்து விளக்கி எழுதுக.

15. (அ) கணினியின் வரலாறு குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) இணையதள வசதிபெறும் முறைகள் குறித்த விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றினுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. நிகழ்த்துக்கலைகள் வழியாகத் தகவல் தொடர்புகளை மேற்கொண்ட முறைகள் குறித்து விவரிக்க.

17. இந்தியாவில் தந்திமுறைத் தொலைபேசியின் வகைகள் குறித்து விவரிக்க.

18. இந்தியாவில் வானொலி தோன்றி வளர்ந்த விதம் குறித்துக் கட்டுரை வரைக.

19. இந்தியாவில் தொலைக்காட்சியின் வளர்ச்சி குறித்து விவரிக்க.

20. இந்தியாவில் செயற்கைக் கோள்களின் பயன்பாடுகள் குறித்துக் கட்டுரை வரைக.

———————

**F–1784**

| Sub. Code |
|---|
| 7MTA4C1 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**Fourth Semester**

தமிழ்

தொல்காப்பியம் - பொருளதிகாரம் (பேராசிரியர் உரை)
(பின் நான்கியல்கள்)

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. தருகண் என்றால் என்ன?

2. கூழைவிரித்தல் என்பதன் பொருள் யாது?

3. உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும் - பொருள் தருக.

4. மெய் உவம உருபுகள் நான்கினைக் கூறுக.

5. தொல்காப்பியர் கூறும் செய்யுள் உறுப்புகளுள் ஐந்தினைக் கூறுக.

6. ஓரசைக்குரிய வாய்பாடுகளைக் கூறுக.

7. பிண்டம் என்றால் என்ன?

8. பண்ணத்தி என்றால் என்ன?

9. குருளைக்குரிய இளமைப் பெயர்களைக் கூறுக.

10. வழி நூலின் இயல்பு யாது?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) 'சிறந்த பத்தும் செப்பிய பொருளே' - விளக்குக.

(அல்லது)

(ஆ) பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகள் குறித்து விளக்கி எழுதுக.

12. (அ) உவமையின் இயல்பாகுபாடு குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) உவமப் போலியின் வகைகளைத் தக்க சான்றுடன் விளக்குக.

13. (அ) அடியின் இலக்கணம் யாது? தக்க சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) யாப்பின் வழிய தென்மனார் புலவர் - விளக்குக.

14. (அ) தொன்னெடு மரபிற் கற்பிற் குரியர் - தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) ஆங்கென மொழிப அறிந்திசி னோரே - விரித்துரைக்க.

15. (அ) 'யாத்த ஆண்பாற் பெயரென மொழிப' - விளக்குக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பிய மரபியல் கூறும் உத்தி வகைகளைத் தொகுத்துரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை யளிக்க.

16. எண் வகை மெய்ப்பாடுகள் குறித்துக் கட்டுரை வரைக.

17. உவமைப் பொருள் தொடர்பு பற்றி தொல்காப்பியர் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

18. தொடையின் இலக்கணம் கூறி அதன் வகைகளைத் தொகுத்துரைக்க.

19. உரையின் வகைகள் குறித்துத் தொல்காப்பியர் கூறும் கருத்துக்களை விவரிக்க.

20. மரபியலின் அமைப்பு முறை குறித்து விவரிக்க.

———————

| F–1785 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA4C2 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019.**

**Fourth Semester**

தமிழ்

நாட்டுப்புறவியல்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு** வரிகளில் விடையளிக்க.

1. நாட்டுப்புறவியல் என்றால் என்ன?

2. நாட்டுப்புறவியல் அறிஞர்கள் நால்வரின் பெயரினைக் கூறுக.

3. விடுகதைகள் என்றால் என்ன?

4. நாட்டுப்புறப் பழமொழிகள் மூன்றினைக் கூறுக.

5. வழிபாடு என்றால் என்ன?

6. நாட்டுப்புற விழாக்கள் நான்கின் பெயரினைக் கூறுக.

7. சிலம்பாட்டம் என்றால் என்ன?

8. நாட்டுப்புற விளையாட்டுக்கள் நான்கின் பெயரினைக் கூறுக.

9. உளவியல் அறிஞர்கள் மூவரின் பெயரினைக் கூறுக.

10. சமூகவியல் என்றால் என்ன?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடையளிக்க.

11. (அ) உலக நாட்டுப்புறவியலின் வரலாறு குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புற இயலும் இதழ்களும் குறித்து விளக்கி எழுதுக.

12. (அ) நாட்டுப்புறப் பாடல்களின் தன்மையினை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறக் கதைகள் கூறும் செய்திகளை விளக்குக.

13. (அ) நாட்டுப்புற மக்களின் சடங்கு முறைகள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புற மக்களிடம் விழாக்கள் பெற்றிருக்கும் செல்வாக்கு குறித்து விளக்குக.

14. (அ) தேவராட்டம் என்றால் என்ன? அதன் தனித்தன்மைகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) ஒயிலாட்டத்தின் அமைப்பும், சிறப்பும் குறித்து விளக்குக.

15. (அ) புராணங்களுக்கும், வரலாற்றியலுக்குமான தொடர்பினை ஆராய்க.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறவியலும், மொழியியலும் குறித்து விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில்** விடையளிக்க.

16. நாட்டுப்புறவியலின் தோற்றமும், வளர்ச்சியும் குறித்து விவரிக்க.

17. கதைப்பாடல்களின் வகைகள் குறித்துக் கட்டுரை வரைக.

18. நாட்டுப்புற இலக்கியங்களில் நம்பிக்கை பெறுமிடத்தினை ஆராய்க.

19. நாட்டுப்புற நாடகங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

20. நாட்டுப்புறவியலின், மானுடவியலும் குறித்துக் கட்டுரை வரைக.

**F–1786**

| Sub. Code |
|---|
| 7MTA4E2 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**Fourth Semester**

தமிழ்

விருப்பப்பாடம் : சுற்றுலாவியலும் பயன்பாடும்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours                    Maximum : 75 Marks

பகுதி அ                    $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடையளிக்க.

1. தனிநபர் சுற்றுலா என்றால் என்ன?

2. சுற்றுலா நோக்கமில்லாப் பயணிகள் என்பவர் யா?

3. உலகப்புகழ்பெற்ற இந்திய நினைவுச் சின்னங்கள் மூன்றினைக் கூறுக.

4. இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நோக்கங்கள் இரண்டினைக் கூறுக.

5. தேசிய வருமானம் என்றால் என்ன?

6. சுற்றுலாவால் மறைமுகமாகப் பயன் பெறுபவர்கள் யாவர்?

7. ‘ஆயிரம் கோயில் நகரம்’ என்று அழைக்கபடும் ஊர் எது? அவ்வூரின் சிறப்புகள் இரண்டினைக் கூறுக.

8. ‘இரயிலில் தனிப்பெட்டிச் சுற்றுலா’ என்றால் என்ன?

9. ‘பென்சன்’ என்றால் என்ன?

10. சுற்றுலா வழிகாட்டிகளை இந்திய அரசு எத்தனை வகையாகப் பகுத்துள்ளனர்? அவை யாவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை யளிக்க.

11. (அ) சுற்றுலாடிவியலின் வரையறைகள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) காலந்தோறும் சுற்றுலாவியலின் நிலை குறித்து விளக்கி எழுதுக.

12. (அ) இந்தியாவில் சுற்றுலா வளர்ச்சி குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழகச் சுற்றுலாத் தலங்கள் குறித்து விளக்குக.

13. (அ) சுற்றுலா வளர்ச்சிக்கான காரணங்கள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சுற்றுலாத் தகவல் வாணிகச் சமநிலையும் குறித்து விளக்கி எழுதுக.

14. (அ) சுற்றுலாத் தகவல் மையங்களின் பணிகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சுற்றுலா அமைச்சகம் குறித்து விளக்கி எழுதுக.

15. (அ) ஹோட்டல்களின் வகைகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) சுற்றுலா நடத்துனர் என்பவர் யார்? விளக்கி எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை யளிக்க.

16. சுற்றுலாவின் பயன்பாடுகள் குறித்துக் கட்டுரை வரைக.

17. சுற்றுலாக் கழகத்தின் பணிகள் குறித்து விவரிக்க.

18. "சுற்றுலா வாணிகம் நாடுகளுக்கிடையே உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வைக் குறைக்கிறது" என்னும் கூற்றை ஆராய்க.

19. சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

20. சுற்றுலாத்துறையின் பணிகள் குறித்து விவரிக்க.

———————